

மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்

கோயம்புத்தூர் மாவட்டம்

கோயம்புத்தூர் மாவட்டம், மேட்டுப்பாளையம் வட்டம், சிக்காரம்பாளையம் ஊராட்சி (ம) கிராமம், க.ச.எண்-**113B/2,118**-ல் அமையும் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவுக்கான தொழில்நுட்ப ஒப்புதல் வரைபடம்.

அளவு : **1:800**

இணையவழி விண்ணப்ப எண்: **A9IMXFBA ,Date:31.05.2023.**

குறிப்பு :

மனைப்பிரிவின் மொத்தப்பரப்பு	:	2.37 ஏக்கர்
(பட்டாவின் படி)	:	9607.00சமீ
ஒதுக்கிய மனைகள்	:	51

மனைப்பிரிவின் எல்லை .....

நிலையிலுள்ள சாலை .....

வ

பொது ஒதுக்கீடு

உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்ட:

மனைப்பிரிவின் சாலையின் பரப்பு : **3608.80** சமீ

பூங்காவிற்கு தேவையான பரப்பு : (மனைப்பிரிவின் மொத்தப்பரப்பு- மனைப்பிரிவின் சாலையின் பரப்பு) **x10%**

: (9607.00 - 3608.80 = 5998.20) x 10% = 599.82சமீ

பூங்கா ஒதுக்கீடு அரசாணை எண்:18 நநிம) குவ.துறை நாள் 04.02.2019 -ன் படி **TNCDBR**-19 விதி எண் .47 (6) -ன் படி பூங்கா ஒப்படைப்பிற்கான உரிய தோகை மனுதாரரால் முழுமையாக செலுத்தப்பட்டுள்ளது.

பொது ஒதுக்கீடான

உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்ட பொது ஒதுக்கீடு பரப்பு:

(மனைப்பிரிவின் மொத்தப்பரப்பு- மனைப்பிரிவின் சாலையின் பரப்பு)**x 0.5%**

= (9607.00 - 3608.80) x 0.5% = 29.99 சமீ

ஒப்படைக்கப்பட்ட பரப்பு **= 34.37** சமீ (0.57%)

TANGEDGO-க்கு தானமாக ஒப்படைக்கப்பட்ட பொது ஒதுக்கீடு பரப்பு:

(மனைப்பிரிவின் மொத்தப்பரப்பு- மனைப்பிரிவின் சாலையின் பரப்பு)**x 0.5%**

= (9607.00 - 3608.80) x 0.5% = 29.99 சமீ

ஒப்படைக்கப்பட்ட பரப்பு **= 37.37** சமீ (0.62%)

மூலை முடக்கு: 12.0மீ வரை அகலம் உள்ள சாலைகளுக்கு 1.50மீx1.50மீ விடப்படல் வேண்டும்

நிபந்தனைகள்

1. அரசாணை எண்: 18 நகராட்சி நிர்வாக (ம) குடிநீர் வழங்கல் துறை நாள்: 04.02.2019-ன் படி (ம) பொது உபயோகம் உள்ளாட்சிக்கு தானமாகவும், அரசாணை எண்: 16 நநிம) குவ.துறை நாள்: 31.01.2020-ன் படி TANGEDGO-க்கான பரப்பு TANGEDGO (அ) உள்ளாட்சிக்கு தானமாகவும் ஒப்படைப்பு செய்யப்படவேண்டும்.
2. இம்மனைப்பிரிவிற்கு உள்ளாட்சி இறுதி ஒப்புதல் அளிக்கும் முன் இடத்தினை எந்தத்துறையாலும் நில ஆர்ஜித் நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை என்றும், எந்த துறைக்காகவும் நில ஆர்ஜிதப்படியல் மாவட்ட வருவாய் அலுவலருக்கு அனுப்பப்பட வில்லை என்றும் ஊராட்சி தலைவர் உறுதி செய்து கொள்ள வேண்டும்.
3. நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என்று அறியப்பட்டாலோ அல்லது மனைப்பிரிவுக்கு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் மனைப்பிரிவுக்கு வழங்கப்பட்ட தொழில்நுட்ப ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்பும் இன்றி நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களால் ரத்து செய்யப்படும்.
4. விற்பனைக்குண்டான மனைகளை விற்பனை செய்யும் போது இவ்வாணையின் நகலோடு நகர் ஊரமைப்புத்துறையில் ஒப்புதல் அளிக்கப்பட்ட வரைபட நகல் மனை வாங்குபவர்களுக்கு கட்டாயம் வடிங்கப்பட வேண்டும்.
5. ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தை எந்த வித மாற்றம் விடுதலின்றி மனைப்பரிவு நுழைவாயிலில் 120cm x 60cm அளவிலான நிரந்தர தகவல்பலகை மூலம் பொதுமக்கள் பார்வைக்கு நிரந்தரமாக பிரசுரிக்கப்பட வேண்டும்.
6. உத்தேச மனைப்பிரிவில் அரசாணை எண்:181, வீட்டுவசதி (ம) நகர்புற வளர்ச்சி துறை நாள்: 09.12.2020-ல் தெரிவித்துள்ளவாறு சாலைகள், மழைநீர் வடிகால் வசதி, மேல்நிலை தொட்டியுடன் கூடிய குடிநீர் வசதிகள் (ம) தெரு விளக்குகள் ஆகியவை மனைப்பிரிவின் விருப்பத்திற்கு ஏற்ப அமைக்கப்பட்ட பின்னர் இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.

Signature Not Verified
Signed by: Joint Director
Location:Coimbatore
Date:2023.06.14 15:10:43

APPROVAL No:SWP/DTCP/COIMBATORE/LAYOUT No: 214/2023.

இணை இயக்குநர்,
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,
கோயம்புத்தூர் மாவட்டம்.